# உலகத் தமிழ்க் களஞ்சியம் அறிமுக விழா

சென்னை, மார்ச் 6-

1890ஆம் ஆண்டுகளில் சென்னை பச்சையப்பன் கல்லூரியில் பணியாற்றிய தமிழ்ப் பேராசான் செந்தமிழ்ச் சான்றோர் ஆ.சிங்காரவேலு எண்ணத்தில் உருவாக்கம் கண்டதுதான் முதல் தமிழ்க் களஞ்சியம் என்று அதன் பதிப்பாசிரியரும் மயில் இதழ் நிர்வாக ஆசிரியருமான டத்தோ ஆ. சோதிநாதன் கூறினார்.

சென்னை புத்தகக் கண்காட்சி பேரரங்கில் உலகத் தமிழ்க் களஞ்சியம் அறிமுக விழாவில் உரையாற்றியபோது அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தனிப்பெருவாக நாட்டின் பல பகுதிகளுக்கும் சென்று பலவாண்டுகள் அரிதின் முயன்று நம் முன்னோர் விட்டுச் சென்ற பெருஞ்செல்வங்களை - தமிழ் இலக்கிய - இலக்கண நூல் செய்திகளை எல்லாம் திரட்டியும் வகைதோறும் பகுத்தும் ஒரு களஞ்சியமாகத் தொகுத்தார்.

அதுதான் ஆயிரத்து நூற்று பக்கங்களில் அமைந்த அபிதான சிந்தாமணி. அதுதான் தமிழ் மொழிக்கு எனத் தொகுக்கப் பெற்ற முதல் தமிழ்க் களஞ்சியம். அதனைப் பதிப்பித்த பெருந்தகை, மதுரையில் நான்காம் தமிழ்ச் சங்கத்தை உருவாக்கிய பெருநிலக்கிழார் வள்ளல் பெருமான் பொன்னுசாமியின் திருக்குமாரர் பொ. பாண்டித்துரைசாமி ஆவார். அதனை 1910ஆம் ஆண்டு முதன் முதலில் அச்சிட்டு வெளியிட்டார்கள்.



தலைமைத் தொகுப்பாசிரியர் முனைவர் இ.ஜே. சுந்தர்

பிற்காலத்தில் அரசு, பல்கலைக்கழகம் போன்ற பெருநிறுவனங்கள் தமிழ்க் களஞ்சியம் - வாழ்வியல் களஞ்சியம், அறிவியல் களஞ்சியம் போன்ற பொதுவான களஞ்சியத் தொகுதிகள் வெளியிட்டமை வேறு கதை.

சிங்காரவேலு காலத் தமிழ்கூறு உலகம் ஒரு சிற்றெல்லைக்குள் அடங்கியிருந்தது. வட வேங்கடம் - தென்குமரி ஆயிடை குறுகியிருந்தது. ஸ்ரீலங்கா, மலாயா போன்ற சில நாடுகளில் ஓரளவு பரந்திருந்தது. இன்றோ உலகளாவிய நிலையில் நூற்றைம்பது நாடுகளுக்கும் மேலாக ஒன்பது கோடிக்கும் அதிகமானோர் பேசும் மொழியாக விரிந்து பரவியுள்ளது. அறிவு உலகம் பல்வேறு துறைகளில் பல்கிப் பெருகிவிட்டது. இன்று அத்தகைய தனி மனித முயற்சி சாத்தியமற்றது.

உலகத் தமிழ்க் களஞ்சியம் உருவாக்க முறையான திட்ட வரைவு வேண்டும். தக்கார் பெருந்துணை வேண்டும். நிறைந்த பொருள் வளமும் வேண்டும். இந்நிலையில் 2004இல் ஒரு நாள் தமிழகத் தலைநகர் சென்னையில் அண்மையில் நம்மை விட்டுப் பிரிந்த தமிழ்ப் பேரறிஞர் முனைவர் க.ப. அறவாணன் இல்லத்தில் கூடினோம். பேராசிரியர் இ.ஜே. சுந்தர் ஒரு திட்டவரைவைக் கொணர்ந்திருந்தார். அன்றே இந்தக் களஞ்சியச் செயல் திட்டம் உருவானது.

சிறப்பு அறிவுரைஞராகப் பேராசிரியர் பெருமான் க.ப. அறவாணன் அமைந்தார். முனைவர் இ.ஜே. சுந்தர் முதன்மைத் தொகுப்பாசிரியராகவும் ஒருங்கிணைப்பாளராகவும் பொறுப்பேற்றார். சென்னையில் ஓர் அலுவலகம் தமிழ்க் களஞ்சியச் செயலகமாக நிறுவப் பெற்றது.

துறைசார்ந்த அறிஞர்களிடம் படைப்புகளைப் பெறுவதும் அவற்றை நெறிப்படுத்துவதும் எளிதான செயலன்று. எனினும் முதன்மைத் தொகுப்பாசிரியர் பெரிதும் முயன்று அப்பணியைத் தக்கார் துணையுடன் அருமையாகச் செய்து முடித்தார். உலகளாவிப் பரந்து விரிந்த படைப்புகளைத் தொகுத்தும் விரித்தும் வகைப்படுத்தியும் நிரல்பட அமைத்தும் அளிப்பது அரிதினும் அரிதான செயல். எத்துணையோ இடர்ப்பாடுகளுக்கிடையில் கருமமே கண்ணாயிருந்து இவ்வளவு சிறப்பாகக் களஞ்சியத்தைத் தொகுத்துத் தமிழ்கூறு நல்லுலகுக்கு வழங்கியுள்ள பெருந்தகைமையாளர் இ.ஜே. சுந்தரின் தொண்டு தமிழுலகால் என்றென்றும் போற்றப்படும், நன்றியோடு நினைவுகூரப்படும் என்பதில் ஐயமில்லை.



நலங்கிள்ளிக்கு அன்பளிப்பு



முனைவர் தாயம்மாள் அறவாணனுக்குக் காணிக்கை

அவரோடு பணியாற்றிய நலங்கிள்ளியின் கடுமையான உழைப்பும், முக்கியத் திருத்தங்கள் செய்து உதவிய (அமரர்) பேராசிரியர் கா. பட்டாபிராமனின் ஊக்குவிப்பும் செவ்விய முறையில் தங்கள் படைப்புகளை வழங்கிய துறைசார்ந்த அறிஞர்கள், சென்னை அலுவலக ஊழியர்கள் ஆர். ராஜேஷ்குமார், ஜி. குமரேசன் ஆகியோரின் தளரா உழைப்பும் மறக்க இயலாதவை.

அவ்வாறே மலேசியா, சிங்கப்பூர் தலைமைச் செய்தியாளர் முனைவர் முரசு நெடுமாறனின் கைமாறு கருதாப் பேருழைப்பும் அவர்களுக்குத் துணை நின்று உதவிய அமரர் முனைவர் ரெ. கார்த்திகேசு, அமரர் வழக்கறிஞர் வ. முனியன், சிங்கப்பூர் செய்தியாளர்கள் முனைவர் முருகானந்தம், நா. ஆண்டியப்பன், அமலதாசன், முனைவர் ரத்தின வெங்கடேசன், கோலாலம்பூர் உமா பதிப்பக அலுவலர்கள் ஆகியோரின் அருஞ்சேவைகளும் என்றும் நினைக்கப்படும் என்றார்.

மொழியும் கலையும் வாழ்வியலும் பெரும் மாற்றம் பெற்றுள்ளன. அறிவியல் விரிவடைந்துள்ளது. மூவாயிரம் ஆண்டுகளுக்கு மேற்பட்ட வரலாற்றைப் பெற்றுள்ள தமிழ் இன்று எட்டுத் திசைகளிலும் ஐம்பெருங் கண்டங்களிலும் விரிந்து பரவியுள்ளது. அவற்றை இங்கு கழுகுப் பார்வையாக ஒரு நுண்ணோக்கி வழியாகப் பார்க்க முயன்றுள்ளோம்.

இது பெருங்கடலில் சிறு வலைவீசி, மீன் பிடிக்க முயலும் கதைதான். மூவாயிரம் பெருந்தொகுதிகளாக விரிய வேண்டிய தகவல்களை மூன்று சிறு தொகுதிகளில் அடக்கியுள்ளோம் என்று டத்தோ ஆ. சோதிநாதன் கூறினார்.